### பெண்களின் முன்னேற்றத்திற்காகக் கொண்டு வரப்படும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் திட்டங்கள் ஒவ்வொன்றும் முத்தானவை!

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க, சார்பில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற,

### “முன்னேற்றப் பாதையில் தி.மு.க, முப்பெரும் விழா” கருத்தரங்கில் – திருமதி மீரா நாகராஜன் பாராட்டு!

**சென்னை, அக். 12-**

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் அம்பத்தூர் தெற்குப் பகுதி - 87 மற்றும் 89 ஆகிய வட்டக் கழகங்கள் சார்பில் நடைபெற்ற “முன்னேற்றப் பாதையில் தி.மு.க. முப்பெரும் விழா” கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிய திருமதி மீரா நாகராஜன், “தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்திற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றும் திட்டங்கள் ஒவ்வொன்றும் முத்தானவை” என்று குறிப்பிட்டார்.**



இக்கருத்தரங்கில் திருமதி மீரா நாகராஜன் பேசியதாவது:-

இந்த நிகழ்ச்சியைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது. என்ன காரணம் என்றால், தொடர்ந்து இந்த ஐந்து ஆண்டுகளில் நம்முடைய முதல்வர் அவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளில், குறிப்பாக முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழாக்களில் அமைச்சர் அவர்களின் அழைப்பின்பேரில் பல முறை நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியைப் பொருத்தவரையில், இங்கு வந்திருப்பவர்களில் ஒருபுறம் கழகத்தோடு தொடர்புடையவர்கள்:சட்டமன்ற உறுப்பினர்கள் - வார்டு கவுன்சிலர்கள் - கழகத் தொண்டர்கள் அத்தனை பேரும் வந்திருக்கிறார்கள். மற்றொருபுறம், பயன்பெறும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தார் வந்திருக்கிறார்கள்.

இதில் கல்யாணமாலை மீரா நாகராஜன் எதற்காக? ஒரே ஒரு காரணம்தான். இதுபோன்ற நிகழ்வுகளை பொதுமக்கள் எப்படி பார்க்கிறார்கள் என்பதை என் மூலமாக தெரியப்படுத்த வேண்டும் என்று இந்த அமைப்பு விரும்பியிருக்கலாம். அதற்காகத்தான் இந்த அழைப்பு என்று நான் நினைக்கிறேன்.

**பெண்களுக்கான திட்டங்கள் முத்தானவை!**

அந்த வகையில் தொடர்ந்து பெண்களுக்காக இந்த மாமன்றம் - இந்த அமைப்பு - இந்த நம்முடைய ஆட்சி தொடர்ந்து பணிகளை செய்து கொண்டிருக்கிறது. அதற்காக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்ன செய்தார்கள் என்று பார்த்தால், அரசு என்றால் அதற்கு நிறைய பணிகள். நாம் என்ன நினைக்கிறோம் என்றால், நாம் ஒரு மனு கொடுத்தோம்; நாம் ஒரு குறையை சொன்னோம் என்றால், அதை தீர்த்து வைப்பது மட்டும்தான் அரசின் பணி என்று நினைக்கிறோம். ஆனால் அது அனைத்தையும் தாண்டி, நீதியை பரிபாலனம் செய்வது; காவல் துறையை பார்த்துக் கொள்வது; எதிர்க்கட்சிகளின் பிரச்சினைகளை சரி செய்வது; கட்சிப் பணிகள் செய்வது; மக்கள் நலத்திட்டங்கள்; மருத்துவ உதவிகள்; சுகாதாரம் என்று அரசுக்கு நிறைய பொறுப்புகள் இருக்கிறது.

அது அனைத்தையும் தாண்டி, ஒவ்வொரு அரசாங்கமும் மக்களுக்கு நலத்திட்டங்களை சொல்கிறது. அதுபோன்று நலத்திட்டங்கள் நிறைய இருந்தாலும், சில திட்டங்கள் மட்டும் மக்கள் மனதில் பளிச் சென்று பதியும். உதாரணமாக, நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் கல்வி, மதிய உணவு. இதை நினைத்து நாம் இன்றும் பெருமைப்படுகிறோம். அடுத்தது, கலைஞர் அவர்களின் காப்பீடு திட்டம். அதனால் எத்தனை லட்சம் பயனாளிகள் பயனடைந்து இருப்பார்கள் என்பதை நாம் சொல்லவே முடியாது. அதேபோன்றுதான் நம்முடைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்காக ஏற்படுத்தித் தரும் திட்டங்கள் ஒவ்வொன்றும் முத்தானவை. அதற்காகத்தான் நான் இந்த அரங்கிற்கு வந்திருக்கிறேன்.

பெண்களுக்கு என்ன செய்கிறார்கள்? இலவச பேருந்து பயணம்: என்ன பெரிய இலவச பேருந்து பயணம் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அதனால் கிராமப்புறங்களில் பெண்கள் பயனடைவதை நாங்களே கல்யாண மாலை படப்பிடிப்பில் பல முறை கேட்டிருக்கிறோம்; பார்த்திருக்கிறோம்.

அதேபோன்றுதான், மகளிர் உரிமைத் தொகை: அவர்கள் பெயர் வைப்பது மிக அழகு. மகளிருக்கு ஏதோ கொடுக்கிறோம் என்று இல்லாமல், உரிமையாக அவர்கள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு.

**கல்வியில் சிறந்த தமிழ்நாடு!**

படிக்கும் பெண்களுக்கான தரும் ஆயிரம் ரூபாய். சமீபத்தில், “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சி நடந்தது. அப்போது நான் தொலைக்காட்சியில் ஒன்று பார்த்தேன். அதில் ஒரு பெண் சொல்கிறார், “என் அம்மாவிற்கு காது கேட்காது. அனைவருமே அவர்களை அவமானப்படுத்துவார்கள். அவர்கள் முன்னாடியே பின்னாடியே தவறு தவறாக பேசுவார்கள். மாதம் கொடுக்கும் ஆயிரம் ரூபாயை வைத்து என் அம்மாவிற்கு ஒரு காது மிஷின் வாங்கி கொடுத்தேன். இப்போது, என் அம்மாவிற்கான மரியாதையை நான் பெற்றுத் தந்தேன்” என்று அந்தப் பெண் கூறினார். எனவே, இந்த ஆட்சியின் கடமை என்ன? இந்த ஆட்சி என்ன செய்கிறது? பெண்களுக்கான மரியாதையை தொடர்ந்து பெற்று தந்து கொண்டே இருக்கிறது. அதற்காக பாராட்டுகள்.

அதே இடத்தில் ஒரு சவரத் தொழிலாளியின் மகன் டிஜிட்டல் ஸ்கிரீனில் சொன்னார், “நான் வெளிநாட்டில் சென்று படித்துக் கொண்டிருக்கிறேன்”.

அதேபோன்றுதான் ராணிப்பேட்டையைச் சேர்ந்த சுப்புலட்சுமி, “புதுமைப்பெண் திட்டத்தின் மூலம், தான் என்ன பயன் அடைந்தோம்” என்று கூறினார்.

இவ்வாறு ஒவ்வொரு நலத்திட்டங்களும், பெண்களுக்காகவும் - குழந்தைகளுக்காகவும் - தேவைப்படுபவர்களுக்காகவும் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறார்கள்.

அந்த வகையில்தான், ‘பெண்மை வாழ்வில் நன்மை பிறக்கும்; பெருமைக்காக்கவே சூரியன் உதிக்கும்’ என்ற இந்தத் திட்டமும் அதை நோக்கிய பயணம்தான். அதற்காக வாழ்த்துகள்.

ஏன் இந்த கர்ப்பிணிப் பெண்கள்? கர்ப்பிணிப் பெண்களுக்கு செய்வதனால் என்ன பிரயோஜனம்? என்று பார்த்தோம் என்றால், சுதந்திரத்திற்கு முன்பு, இந்தியாவில் கர்ப்பிணி பெண்கள் கர்ப்பகாலத்தில் உயிரிழந்தவர்கள் மிகவும் அதிகம். அதேபோன்றுதான் பிறந்த குழந்தை, Mortality Rate மிகவும் அதிகமாக இருந்தது.

**கர்ப்பிணிப் பெண்களுக்கான திட்டங்கள்!**

அதற்கு காரணம், இரண்டே இரண்டு விஷயம்தான். 1. அவர்களுக்கான மருத்துவ உதவி உடனடியாக கிடைக்கவில்லை. 2. அவர்களுக்கான ஊட்டச்சத்து மிக்க உணவு. இது இரண்டும் இல்லை என்றால், கர்ப்பிணி பெண்கள் இறப்பதும், அதே போன்று வயிற்றில் உள்ள சிசு பாது காப்பாக இல்லாமல் இருப்பதும் நடக்கும்.

இது அனைத்தையும் தாண்டி இது இரண்டையும் காப்பாற்றினோம் என்றால், இன்றைக்கு தமிழ்நாடு கர்ப்பிணிப் பெண்களின் இறப்பு விகிதத்தில் மிக மிக மிக குறைந்த சதவிகிதமாக இருப்பதற்கு காரணம், இந்த அரசாங்கம் கர்ப்பிணிப் பெண்களை இவ்வளவு அழகாக, இன்னும் சொல்லப்போனால் கர்ப்பிணிப் பெண்களுக்கு பிறந்த வீட்டில் என்ன செய்வார்களோ அதுபோன்று தாய்மாமன் சீரை நம்முடைய முதல்வர் செய்கிறார். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என்ன தாய்மாமன் சீர்?**

இன்றைக்கு நான் வந்தவுடன், இந்தப் டப்பா எல்லாம் இருக்கிறதே இன்றைக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டேன். இதற்கு முக்கியமாக நான் கவுன்சிலர்களைதான் பாராட்ட வேண்டும். ஏன் என்றால், அவர்கள் என்னை எப்படி அழைத்தார்கள்! டாக்டர் பூர்ணிமா. எனக்கு மிகவும் சந்தோசம். முதலில் படித்தவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று யோசிப்பதே பெரிய விஷயம்; பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று யோசிப்பது பெரிய விஷயம். அந்த வகையில் நம்முடைய தமிழ்நாட்டில் கவுன்சிலர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள்; அதிலும் அனைவரும் படித்தவர்கள் என்பதற்காக அவர்கள் அனைவரையும் நான் பாராட்டு கிறேன்.

அவர்கள் என்னை எவ்வாறு அழைத்தார்கள் என்றால், ஒரு சம்பந்தியை அழைப்பது போன்று அழைத்தார்கள். நாம் சம்பந்தி வீட்டுக்கு சென்றோம் என்றால், வெற்றிலை, பாக்கு, பூ, பழம் அனைத்தையும் வாங்கி செல்வோம் அல்லவா... அதுபோன்று சம்பிரதாயமாக வந்து அழைத்தார்கள். அப்போதே நான் நினைத்தேன், இந்த நிகழ்ச்சி இவ்வாறு வித்தியாசமான நிகழ்ச்சியாக இருக்கக் கூடும் என்று.

அந்த வகையில் பார்த்தால், இந்தப் பெட்டியில் என்ன எல்லாம் இருக்கிறது என்று நான் கேட்டேன். அந்த கவுன்சிலர்கள் சொன்னார்கள்; இதில் அந்த குழந்தைகளுக்கான அனைத்து விஷயங்களும் இருக்கிறது. அதாவது ஏதோ கொடுத்தோம்; எங்கோ ஒரு பொருளை வாங்கினோம்; யார் இருப்பதிலேயே குறைந்த விலைப்புள்ளிக்கு எடுத்தார்களோ அவர்களிடம் பொருளை வாங்கி கொடுத்தோம் என்று அரசாங்கத்தில் நடக்கும் என்று நாம் அனைவரும் நினைத்துக் கொண்டிருந்தோம்.

ஆனால் இவர்கள் வாங்கி வைத்திருக்கும் பொருள் ஹிமாலயாஸ். இருப்பதிலேயே சிறந்த பிராண்ட். அதேபோன்று மண்ணா ஹெல்த் மிக்ஸ். அனைத்துமே பிராண்ட் பொருட்கள்.

பெண்களுக்கு வளை காப்பு என்றால், தாய் மாமனோ அல்லது பெண்ணின் தகப்பனோ புடவை வாங்கித் தருவார்கள். அதுபோன்று நம்முடைய அரசு அவர்களுக்கு புடவை வாங்கிக் கொடுத்திருக்கிறது.

**எதிர்கால சந்ததியை நல்ல முறையில் உருவாக்குவோம்!**

அதேபோல், குழந்தைக்கான துணி, ஊட்டச்சத்துக்கான நட்ஸ், அதை தாண்டி அந்தக் குழந்தை பிறந்தவுடன் வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காக அந்தக் குழந்தைக்கான பெட். அதைத்தவிர அவர்களுக்கு மருத்துவச் செலவிற்காக ரொக்கப் பணமும் உண்டு என்று கூறினார்கள். இதைவிட தாய்மாமன் சீர் அல்லது தாய்வீட்டுச் சீர் வேறு என்ன கிடைக்க முடியும்!

இதை வாழ்த்துவதற்காகத்தான் நான் கல்யாணமாலையில் இருந்து வந்திருக்கிறேன். கல்யாண மாலைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? எங்கள் வேலைநல்லபையனையோ -பெண்ணையோ பார்த்துக் கொடுப்பது; அடுத்து நம்முடைய அரசாங்கத்தின் வேலை திருமணமானவர்களுக்கு நல்லபடியாக ஊட்டச்சத்து நன்றாக கொடுத்த நல்ல எதிர்கால சந்ததியை உருவாக்குவது. இவ்வாறு செய்வதற்காகத்தான் அவர்கள் என்னை அழைத்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு, கர்ப்பிணிப் பெண்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்காக வந்திருக்கும் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதா ஜீவன் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களையும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் மகளிரையும் - சமூக நலத்தையும் பிரிக்கவே முடியாது. பெண்கள் நன்றாக இருந்தால், சமூகம் நன்றாக இருக்கும். அந்த வகையில் அந்த இரண்டு துறையும் வைத்திருக்கும் அம்மையார் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள். பொதுவாக, நாம் கோயிலுக்கு செல்ல வேண்டும் என்றால், அனைவரிடமும் அனுமதி பெற வேண்டும். ஆனால், ஒவ்வொரு கோவிலிலும் இறைவனே அவரை அழைத்து அருள் ஆசி வழங்குகிறார். அந்த வகையில் நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு வந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் - கழகத் தொண்டர்கள் - கவுன்சிலர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இடத்தில் கல்யாணமாலை பல நிகழ்ச்சிகளை செய்திருக்கிறோம். கடந்த மாதம்கூட ஒரு நிகழ்ச்சி செய்தோம். இப்போது நாளைக்கு இந்த கிரண் பேலஸின் நடந்த விஜயதசமி பட்டிமன்றம், அதனால் இதன் உரிமையாளருக்கு வாழ்த்துகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நல்ல சுகப் பிரசவமாகி நல்லபடியாக இருக்க வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒரே ஒரு அறிவுரைதான். உங்கள் பிறந்த வீட்டிலும் சரி; இப்போது அரசாங்கமும் சரி. உங்களை மிகவும் கவனித்துக் கொள்கிறார்கள். உங்களை கையில் வைத்து பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அவர்கள் அவ்வாறு பார்த்துக் கொள்ளட்டும். ஆனால் பிரசவத்தன்று வரை உங்களுடைய உடல்உழைப்பை தந்தீர்கள் என்றால், சுகப்பிரசவமாகவும். நீங்களும் நன்றாக இருக்கலாம், தாயும் சேயும் நலமாக இருக்கும் என்று கூறி, அப்படி தாயும் சேயும் நலமாக இருக்க வேண்டும். இந்த அரசு தொடர்ந்து மென்மேலும் இந்தப் பணிகளை செய்ய வேண்டும் என்று கூறி வாழ்த்தி, நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு மீரா நாகராஜன் பேசினார்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, முன்னிலையில், நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ரூ .5.60 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து நிலைய பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார் . உடன் ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, சந்தானப்பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.

### சேலம் மாவட்டம் – காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் – கணவாய்புதூர் வழியாக

# ஏற்காடு செல்லும் சாலையினை - 2 கட்டங்களாக விரிவுபடுத்திட நடவடிக்கை!

### அமைச்சர்கள் எ.வ. வேலு – இரா. இராஜேந்திரன் நேரில் ஆய்வு!

சேலம், அக். 12-

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் கணவாய் புதூர் முதல் கண்ணப்பாடி வரை செல்லும் வனசாலையை மேம்படுத்துவது தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய் புதூர் முதல் கண்ணப்பாடி வரை செல்லும் வனசாலையை மேம்படுத்துவது தொடர்பாக கண்ணப்பாடி அடிவாரம் பகுதி யில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணி களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தீவட்டிப்பட்டி தேசிய நெடுஞ்சாலை பிரிவில் இருந்து ஏற்காடு மலைப்பகுதிக்கு செல்லும் கண்ணப்பாடி முதல் நாகலூர் சாலையை மேம்பாடு செய்து மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சேலம் நகருக்கு செல்ல ஏதுவாக இருக்கும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். அதன்படி காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்புதூர் வழியாக கண்ணப்பாடி நாகலூர் வழியாக ஏற்காடு செல்லும் வனசாலையை மேம்படுத்துவது தொடர்பாக கண்ணப்பாடி அடிவாரம் பகுதியில் இன்று ஆய்வு செய்யப்பட்டது.

ஏற்காட்டிற்கு செல்ல ஏற்கனவே சேலம் வழியாகவும், அயோத்தியாப்பட்டணம் வழியாகவும் சாலைகள் உள்ளது. அதேபோல் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் பெங்களூரிலிருந்து வரும் பொதுமக்கள் இச்சாலை மூலம் எளிதாக சேலம் நகருக்கு வராமல் ஏற்காடு செல்ல முடியும். அதன்படி நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களின் மூலம் இச்சாலையினை அகலப்படுத்துவது குறித்து ஆய்வு செய்தபோது இச்சாலையானது ஊராட்சி ஒன்றிய சாலை, வனத்துறை சாலை, மாநில நெடுஞ்சாலை என 3 பிரிவுகளாக உள்ளது.

எனவே நெடுஞ்சாலைத் துறை மூலமாக இச்சாலையை அமைத்திட வனத் துறையிடம் அனுமதி பெற்று சாலை அமைக்க வேண்டும். அதேபோன்று ஊராட்சி ஒன்றிய சாலைகள் அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின்படி சென்னை இயக்குநரகத்தில் அனுமதி ஆணையை பெற்று சாலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறான சூழ்நிலையில் உடனே மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல வேண்டுமெனில் இப்பணிகளை 2 கட்டங்களாக கொண்டு செய்து முடிக்கலாம்.

முதற்கட்டமாக கணவாய்புதூர் வழியாக ஒன்றியசாலை, அதனைத்தொடர்ந்து கணவாய்புதூர் வன சாலை அதன்மூலமாக 5.5 கி.மீதூரம் வரை சாலை அமைத்தால் கண்ணப்பாடி வரை இச்சாலையை கொண்டு செல்ல முடியும். அதன்படி இரண்டாம் கட்டமாக கண்ணப்பாடியிலிருந்து நாகலூர் வழியாக ஏற்காடு செல்ல முடியும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

வனச்சாலைகள் மிக குறுகிய நிலையில் 3 மீட்டரும், ஊராட்சி ஒன்றிய சாலைகள் 3.50 மீட்டரும் உள்ளது. இதில் போக்குவரத்திற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆதலால் இச்சாலை களை அமைப்பது மட்டுமல்லாமல் 5.50 மீட்டர் சாலையாக விரிவுபடுத்த வேண்டும். அவ்வாறாக செய்தால் மட்டுமே பேருந்துகள், கனரக வாகனங்கள் செல்ல முடியும். எனவே கண்ணப்பாடி வரை சாலை அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட வன அலுவலர் ஆகியோர் கலந்து பேசி வனச்சட்டத்தின்படி சாலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பொதுமக்களின் இக்கோரிக்கை குறித்து கலந்து ஆலோசித்து 2 கட்டமாக இப்பணிகளை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, நெடுஞ்சாலைத்துறை சேலம் கோட்ட கண்காணிப்பு பொறியாளர் சசிகுமார், கோட்ட பொறியாளர்கள் திருமதி மங்கை யர்க்கரசி, முத்துக்குமரன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஓ.சிறுவயல் ஊராட்சியில் - கிராம மக்களின் தேவைகள் நிறைவேற்றம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனுக்குப் பாராட்டு!

சிவகங்கை, அக்.12-

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் தமிழகம் முழுவதும் கிராம சபைக் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா ஓ.சிறுவயல் ஊராட்சி சாலிகிராமத்தில் கிராம சபைக் கூட்டம் ஊராட்சி செயலர் கவிதா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தெருக்களில் உள்ள சாதிப் பெயர் நீக்குதல், சாலை, வடிகால் அமைத்தல் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் முதல் தீர்மானமாக ஓ. சிறுவயல் ஊராட்சியில் கிராம மக்களின் கோரிக்கைகளை ஏற்று அனைத்து திட்டப்பணிகளையும் முழுமையாக நிறைவேற்றித் தந்த சட்டமன்ற உறுப்பினர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

கோரிக்கைகள் நிறைவேற உத்தரவிட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.இந்த கிராமசபை கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கலிங்கப்பட்டி அழகு, பெரிய கோவில் சுப்பு, நெற்புகப்பட்டி பழனியப்பன் சாலிபாண்டி சூரக்குடி சொர்ணம், உட்பட சுற்றுப்புற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

### தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 38/சிபிடி, பேரவை இணைப்பு எண்.26 )திட்ட நிர்வாகிகள் தேர்தல், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி வருகிற 25.10.2025 அன்று கழகத்தின் தணிக்கைக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் திரு. அ.சரவணன் அவர்களை மேலிடப் பார்வையாளராகக் கொண்டும் கீழ்க்கண்ட தேர்தல் ஆணையாளர்களைக் கொண்டும் நடைபெறும்.

| தேர்தல் நடத்தப்படும் திட்டங்கள் | தேர்தல் ஆணையாளர்கள் |
| --- | --- |
| வடசென்னை திட்டம் | திரு. **ஜெ.விஜயகுமார்** பேரவைஇணைப்பொதுச் செயலாளர் **தேர்தல் ஆணையாளர்** கைபேசி எண். 9444883555<br>திரு. **என்.தனசேகரன்** பேரவைச் செயலாளர், **துணை ஆணையாளர்** கைபேசி எண். 9444145005 |
| விழுப்புரம் திட்டம் | திரு. **ஜோசப் நெல்சன்** திருச்சி மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் கைபேசி – 6382716377 |

தேர்தல் அட்டவணை, தேர்தல் விதிமுறைகள் ஆகியவை தேர்தல் ஆணையாளர்களால் தனியாக வெளியிடப்படும்.

கலைஞரகம்
சென்னை – 17
நாள்: 10.10.2025

**மு.சண்முகம்**,Ex.MP
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை





திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையத்தை திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தீயணைப்பு துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட மற்றும் நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.